பக்கங்கள்: ஆறு

Registered as a News Paper in Sri Lanka

விலை ரூபா: 5-00

வலம்புரி

VALAMPURI

நாளுக்கு நாள் மாறும்
நவ நாகரிக
ஆடை வகைகளுக்கு:
காவேரி
பட்டுச் சோலை
48, பெரியகடை வீதி
யாழ்ப்பாணம்
T. P 2333

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 கார்த்திகை 23 சனிக்கிழமை (8-12-2001) தொலைபேசி: 3378 ஒலி 353

⚜ புலிகள் மீதான தடை நீக்கம் ⚜ பாதை திறப்பு

⚜ யுத்த நிறுத்தம் ⚜ பேச்சுவார்த்தை

⚜ பொருளாதாரத் தடை எடுப்பு ⚜ ஆயுதக் களைவு

ஐக்கியதேசியக்கட்சி ஆட்சி அமைத்ததும் உடனடியாக நடைமுறைப்படுத்தப்படும்

லண்டன் பி. பி. சி. பேட்டியில் மகேஸ்வரன் உறுதி



(லண்டன்)

ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிபீடம்ஏறியதும் தமிழீழ விடுதலைப்புலிகளுடன்பேச்சு வார்த்தை நடாத்தி இனப் பிரச்சினைக்கு தீர்வுகாணப் படுமென்று, ஜக்கிய தேசியக் கட்சியின் யாழ் மாவட்ட எம். பி. தி. மகேஸ்வரன் பி. பி. ஸிக்கு நேற்று இரவு வழங்கிய பேட்டியில் தெரி வித்துள்ளார்.

அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதா வது.

ஐ.தே. கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா ஆட்சி பீடம் ஏறியதும் அவரது முதல் நடவடிக்கையாக விடு தலைப் புலிகளுடன் பேச்சு நடாத்தி இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும்நடவடிக்கையை எடுக்கவுள்ளார்.

இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து தேர்தலுக்கு முன் னரே கட்சியின் மத்தியகுழு வில் ஆராயப்பட்டு, அதின் பின்னரே தேர்தல் விஞ்ஞா பனம் வெளியிடப்பட்டது.

விடுதலைப் புலிகளோடு பேசுவதற்கு அவர்கள்மீதான தடை ஒரு முட்டுக்கட்டை யாக இருக்குமானால் அவர் கள் மீதானதடை நீக்கப் படுமென்று, கடந்தவாரம் ரணில்விக்கிரமசிங்கா தனி யார்தொலைக்காட்சி ஒன் றுக்கு வழங்கிய பேட்டியில் தெட்டத்தெளிவாக குறிப் பிட்டிருந்தார்.

இத்தடை நீக்கத்திற்குரிய சகல அங்கீகாரமும் அவருக்கு நாட்டு மக்கள் மற்றும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் களால் வழங்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்த வரை விடுதலைப்

(6ம் பக்கம் பார்க்க)

புதிய அரசு விரைவில் பதவியேற்பு

ஆட்சி அமைப்பதற்கு வருமாறு ரணிலுக்கு ஜனாதிபதி அழைப்பு!

இருவரும் இன்று சந்திப்பு

(நமது நிருபர்)

நடந்து முடிந்த தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி (ஐக்கிய தேசிய முன்

பிரதமர் ரட்ணசிறி பதவி விலகினார்

(தொடர்ச்சி)

ரணிலுக்கு ஜனாதிபதி அழைப்பு!

இருவரும் இன்று சந்திப்பு

(நமது நிருபர்)

நடந்து முடிந்த தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி (ஐக்கிய தேசிய முன்னணி)' அமோக வெற்றியீட்டியதை அடுத்து அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவை புதிய அமைச்சரவை அமைப்பது தொடர்பாக கலந்தாலோசிப்பதற்கு வருமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அழைப்பு விடுத்துள்ளார்-

இதனை அடுத்து ரணில் விக்கிரமசிங்கா புதிய பிரதமர். மற்றும் அமைச்சரவை விபரங்களுடன் இன்று காலை ஜனாதிபதியை சந்திக்கவுள்ளார்.

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் 109 ஆசனங்களை பெற்ற நிலையில் ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவை புதிய அரசு அமைப்பது தொடர்பாக ஆராய்வதற்கு வருமாறு ஜனாதிபதி சந்திரிகா அழைப்பு விடுத்துள்ளார்.

தேர்தலில் பெருபான்மை பலத்தை இழந்த நிலையில் பொது ஜன ஐக்கியமுன்னணி தனது நிறைவேற்றுக் குழுவைக் கூட்டி ஆராய்ந்தபின்பே

[6 ம் பக்கம் பார்க்க]

பிரதமர் ரட்ணசிறி பதவி விலகினார்

(தொடர்ச்சி)

பிரதமர் ரட்ணசிறிவிக்கிரம நாயக்கா தனது பிரதமர் பதவியில் இருந்து நேற்று இராஜினாமாச் செய்துள்ளார். தனது இராஜினாமாக் கடிதத்தை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிடம் சமர்ப்பித்துள்ளார்.

பிரதமராக இருந்த சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஒய்வை அடுத்து அப்பதவியையேற்றுக்கொண்ட ரட்ணசிறிவிக்கிரமநாயக்கா பொதுஜன ஐக்கிய முன்னணி அரசில் சர்ச்சைக்குரிய இன வாதப் பிரதமராகப் பதவி வகித்தவர் என்பதுகுறிப்பிடத் தக்கது

(வ- 10)

பகிரங்க பிடியாணை நீதிபதி உத்தரவு

(யாழ்ப்பாணம்)

நாரந்தனைச் சம்பவம்தொடர்பாக ஈ. பி. டி: பி உறுப்பினர்களான என். மதனராஜா மற்றும் நெப்போலியன் ஆகியோரைக் கைது செய்யுமாறு யாழ் நீதிவான் இ. த. விக்கினராஜா பகிரங்க பிடியாணை பிறப்பித்துள்ளார்.

[ந]

வவுனியாவில் ரெலோ - புளொட் மோதல் 2 பேர் சுட்டுக்கொலை; 7 பேர் படுகாயம்

தேர்தல் வெற்றிக்களிப்பில் நடந்த சோகம்

வவுனியாவில் ரெலோ அமைப்பிற்கும், புளொட் அமைப்பிற்கும் இடையே நேற்று கடும் மோதல் இடம்பெற்றுள்ளது.

தேர்தல் முடிந்தவுடன் வன்முறைகள் தொடர்ந்து கொண்டிருக்கும் இந்நிலையில், ரெலோவும், புளொட்டும் துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்டுள்ளன. இருவர் கொல்லப்பட்டுள்ளதுடன் ஏழு பேர் படுகாயமடைந்துள்ளனர். இச் சம்பவம் நேற்றுக் காலை 11: 55 மணியளவில் வவுனியா வைரவப்புளியங்குளம் பகுதியில் இடம்பெற்றுள்ளது. சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது-

ரெலோ அமைப்பினர் தமது தேர்தல் வெற்றியைக் கொண்டாடும் வகையில் லொறி ஒன்றில் ஊர்வலம் போட்டுக்கொண்டு சத்தமிட்டவாறு வீதி வழியே வந்து கொண்டிருந்தனர்.

புளொட் முகாமருகே இவர்கள் சத்தமிட்டு கேலி செய்து கும்மாளம் போட்டதாகவும், இதனை புளொட் உறுப்பினர்கள் தடுத்த போதும், மீறி செயற்பட்டதால் துப்பாக்கி பிரயோகம் இடம்பெற்றுள்ளதாகவும் வவுனியா பொலிசார் தெரிவித்துள்ளனர்.

(இ)

விரிவுரையாளர் அடையாள வேலை நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக சமூகவியல் விரிவுரையாளர் தாக்கப்பட்ட சம்பவத்தினை கண்டித்து பல்கலைக் கழகவிரிவுரையாளர்கள் அனைவரும் நேற்று ஒரு தினம் ஒருமணித்தியாலம் வேலைநிறுத்தப்போராட்டத்தில் ஈடுபட்டனர்

இத் தாக்குதல் சம்பவத்தினைக் கண்டித்து அறிக்கை ஒன்றினையும் வெளியிட்டுள்ளனர்

[ந-43]

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

ரணில் விக்கிரமசிங்காவுக்கு அதிகூடிய விருப்பு வாக்குகள்

(தொழும்பு)

நடந்துமுடிந்த பொதுத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்கா 4இலட்சத்து 15ஆயிரத்து 680 விருப்பு வாக்குகளைப் பெற்று முதலாவது தேர்தல் நாயகனாகத் திகழ்கிறார்.

இவருக்கு அடுத்தபடியாக அதே கட்சியைச் சேர்ந்த மெலிந்த மொறாகொட ஒரு லட்சத்து 34 ஆயிரத்து நூற்று முப்பத்தியிரண்டு விருப்பு வாக்குகளைப் பெற்றுள்ளார்

அதே சட்சியைச் சேர்ந்த ரவி கருணநாயக்க ஒரு லட்சத்து 29ஆயிரத்து தொழாயிரத்து 93 வாக்குகளைப் பெற்றுள்ளார் மற்றும் மொகமட்மவ்றூப், கருணசேன கொடித்துவக்கு, காமினி லொக்குகே, பந்துல குணவர்த்தன எம்.எச்.முகமதி மனோகணேசன்உட்பட பலர் அதிக விருப்பு வாக்குகளைப் பெற்றுள்ளனர்.

பொது ஜன ஐக்கிய முன்னணி சார்பில் ஏ. எச். எம். பௌஸி ஒருலட்சத்து மூவாயிரத்து 717 விருப்பு வாக்குகளும், முன்னாள் இரிக்கெற் அணித் தலைவர் அர்ச்சுனா ரணதுங்கா 97480 விருப்பு வாக்குகளையும் பெற்றுள்ளார் மற்றும் சுசில் பிரேமஜெயசந்த, தினேஸ்குணவர்தன ஜீவன்குமார துங்கா ஆகியோரும் அதிகப்படியான விருப்புவாக்குகளைப் பெற்றுள்ளனர். (வ)

மனமார்ந்த நன்றிகள்

5. 12. 2001 அன்று நடை பெற்ற 12வது பாராளுமன்ற பொதுத் தேர்தலில் எம்மை ஆதரித்து வாக்களித்த யாழ் மாவட்ட மக்களுக்கும் எமது கட்சி சார்பாகவும் பிரதி நிதிஒருவரை தெரிவு செய்த வன்னி மாவட்ட மக்களுக்கும் எமது கட்சி சார்பாக மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

விடுதலைப் போராட்டம் முடிவுற வேண்டும்
நிரந்தர தீர்வுடன் சமாதானம் மலர வேண்டும்

ஜனநாயகமக்கள் விடுதலை முன்னணி
[புளொட்]
தலைமைக் காரியாலயம்
யாழ்ப்பாண மாவட்டம் (4069)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை, கரவெட்டி சந்தை, இறைச்சிக்கடை, துவிச்சக்கரவண்டிபாதுகாப்பு நிலைய குத்தகை - 2002

மீள் கேள்வி அறிவித்தல்

1) கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி : 18.12.2001 நண்பகல் :12:00 மணிவரை
2) கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :19.12.2001 முற்பகல் 11.00 மணிவரை
3) கேள்விகள் திறக்கும் திகதி :- 19.12.2001 நண்பகல் 12. 00மணியளவில்

ஏனைய விபரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

கடைவிபரம்	கேள்விப்பத்திர பணம்	கேள்வி வைப்பு	ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆக்குறைந்த கேள்வித் தொகை (ஜி.எஸ்.ரி நீங்கலாக)
நெல்லியடி உப அலுவலகம்			
1) கோயிற் சந்தை (துவிச்சக்கரவண்டி பாதுகாப்புநிலையம் உட்பட)	250	3000	191,000/-
2) கொட்டடிச்சந்தை	100	500	3,000/-
3) கோயிற்சந்தை மாட்டிறைச்சிக்கடை	100	1000	120,000/-
உடுப்பிட்டி உப அலுவலகம்			
1) உடுப்பிடடிச்சந்தை	500	5000	426,000/-
2) அந்திரான் சந்தை	150	500	19,000/-
3) நவிண்டில் சந்தை	100	500	6,000/-
4) உடுப்பிட்டி மாட்டிறைச் சிக்கடை	150	2000	311,000/-
5) உடுப்பிட்டி துவிச்சக் கரவண்டி பாதுகாப்புநிலையம்	100	500	49,000/-
கட்டைவேலி			
1) துன்னாலை வடக்குச் சந்தை	100	500	600/-

குறிப்பு:- கேள்விப்பத்திரப்பணத்துடன் கேள்விப்பத்திரப்பணத்தின் 12. 5% பொருட்கள் சேவைகள் வரி செலுத்தப்பட வேண்டும்; சித்திரைக் கேவிக்காரர் தமது குத்தகைத் தொகையுடன், குத்தகைத் தொகையின் 12.5 %பொருட்கள் சேவைகள் வரியையும் சேர்த்துச் செலுத்த வேண்டு.

வட: தெ: மே. பிரதேசசபை,
கரவெட்டி,
03- 12- 2001:

த. ஜெயராசா ஜே. பி
தலைவர்
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை,
கரவெட்டி.

(சி-2987)

முக்கிய மாவட்டங்களின் தேர்தல் முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

இடை நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தேர்தல் முடிவுகள் நேற்று தேர்தல் ஆணையாளரால் அறிவிக்கப்பட்டது: அதில் முக்கியமான இல மாவட்டங்களின் முடிவுகள்வருமாறு:

கொழும்பு மாவட்டம்

ஐ. தே. க	5, 46417	12ஆசனம்
பொ. ஐ மு	3, 53401	7ஆசனம்
ஜே. வி. பி	1, 17404	2ஆசனம்

மட்டக்களப்பு மாவட்டம்

த. வி. கூ	86884	3ஆசனம்
பொ. ஐ. மு	25705	1ஆசனம்
சி மு. கா	26725	1ஆசனம்

வன்னி மாவட்டம்

த. வி. கூ	41950	3ஆசனம்
ஐ. தே. க	26575	2ஆசனம்
புளொட்	9614	1ஆசனம்

திருமலை மாவட்டம்

ஐ. தே. க	62930	2ஆசனம்
த. வி. கூ	56121	1ஆசனம்
பொ. ஐ மு	32997	1ஆசனம்

யாழ் மாவட்டம்

த. வி. கூ	1,02324	6ஆசனம்
ஈ. பி. டி. பி	57208	2ஆசனம்
ஐ. தே. க	16045	1ஆசனம்

திகாமடுல்ல மாவட்டம்

சி. மு. கா	75257	3ஆசனம்
பொ. ஐ. மு	65246	2ஆசனம்
ஐ. தே. க	52467	1ஆசனம்
த. வி. கூ	48889	1ஆசனம்

கண்டி மாவட்டம்

ஐ. தே. க	3, 14297	7ஆசனம்
பொ. ஐ. மு	2, 33637	4ஆசனம்
ஜே. வி. பி	37146	1ஆசனம்

தென்மராட்சி மாணவர்க்கான பரீட்சை நிலையங்களின் பெயர் விபரங்கள்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பாடசாலைகளின் க. பொ. த. (சா த) பரீட்சை நிலையங்கள் வடமராட்சியிலும் வலிகாமத்திலும் அமையுமென வலயக்கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார்.

கீழ்க்குறிப்பிடப்படும் தென்மராட்சிப் பாடசாலை மாணவர்களுக்குரிய பரீட்சை நிலையங்களின் விபரம் கீழ் வருமாறு,

மீசாலை. விக்கினேஸ்வரா - நெல்லியடி மெ. மி: த: க: பா:
சாவ. இந்துக்கல்லூரி மண்டபம் இல: 1 - நெல்லியடி மத்திய மகா வித்தி
சாவ. இந்துக்கல்லூரி மண்டப இல. 11 - நெல்லியடி மத்தியமகா வித்தி
சாவ: டிறிபேக் கல்லூரி - கரணவாய் பொன்னம்பல வித்தி
மட்டுவில் சந்திரபுர ஸ்தாபனவரோதய ம: வி: - கரவெட்டி விக்கினேஸ்வராம:வி
சாவ, மகளிர் கல்லூரி - அல்வாய் சின்னத்தம்பி வித்தி.
வரணி ம: வி: மண்டப இல: 1 - நெல்லியடி மத்திய மகா வித்தி.
வரணி ம. வி: மண்டப இல. 2 - கரணவாய் பொன்னம்பல வித்தி
மீசாலை வீரசிங்கம் ம. வி மண்டப இல. 1 - யாக்கரு விநாயகர் வித்தி
மீசாலை வீரசிங்கம் ம வி. மண்டப இல: 2 - கரவெட்டி ஞானசாரியார் வி
கொடிகாமம் திருநாவுக்கரசு ம. வி. மண்டப இல. 1 - வட இந்து மகளிர் கல். புலோலி
கொடிகாமம் -ம: வி. மண்டபம் இல: 11 - வட இந்துமகளிர் கல்லூரி. புலோலி
கச்சாய் அ: த: க. பாட - இமையாணன் அ. த: க. பாட
உசன் இராமநாதன் ம வி பளை மத்திய கல்லூரி மண்டப இல. 1 - தேவரையாளி இந்துக்கல்லூரி
பளை மத்திய கல்லூரி மண்டப இல. 2 - புலோலி றோ க. த க: பாட
வேம்பொடுகேணி அ: த. க: பாட - புலோலி மெ. வி. த க: பாட

வலிகாமத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான தென்மராட்சி பரீட்சை நிலையங்கள

இணுவில் மத்திய கல்லூரி மண்டப இல 1 - மருதனார்மடம் இராம. கல்
இணுவில் மத்திய கல்லூரி மண்டப இல 2 - மருதனார்மடம் இராம, கல்
நாவற்குழி ம: வி. - வசாவிளான் ம.க: உரும்பிராய்
தைதடி முத்துக்குமாரசாமி ம: வி: - பரீட்சை நிலையம் மட்டும் தனது சொந்த இடத்தில் நடைபெறும்.

இன்று ஒரு தகவல்

மண்மூட்டையும் பாவமூட்டையும்

அரசன் ஒருவனுக்கு அழகிய மாளிகை கட்ட ஆசை பிறந்தது. அதற்கான அழகிய இடம் ஒன்றைத் தேர்ந்தெடுத்தான். அங்கு அமைந்திருந்த மூதாட்டியின் குடிசையை இடித்துவிட்டான்.

மூதாட்டியோ அரசனை எதிர்க்க முடியாது, அரசனின் முடிவால் ஏற்பட்ட துயரைத்தை துறவி ஒருவரிடம் கூறினாள். துறவி தனது குடிலில் மூதாட்டியைதங்கவைத்தார்.

சில மாதங்களுக்குப் பிறகு மாளிகை திறக்கப்பட்டது.

துறவி மாளிகைக்கு அழைத்துவரப்பட்டு உபசரிக்கப்பட்டார். அரசன் துறவியிடம், 'ஐயனே! தங்களுக்கு ஏதாவது தந்திட நினைக்கிறேன், வேண்டியதைக் கேளுங்கள்' என்றார்.

துறவி,மன்னனிடம்'அரசே! ஒரு மூட்டை நிறைய மண் நிரப்பி நீங்கள் அருகில் உள்ள எனது குடில்வரை சுமந்து வந்து தரவேண்டும்' என்றார்.

ஒருமூட்டை நிறைய மண் நிரப்பப்பட்டது. மன்னனால் அந்த மூட்டையைத் தூக்க முடியவில்லை.

துறவி சிரித்துக்கொண்டே, 'மன்னா! ஒருமூட்டை மண்ணைக்கூட நம்மால் இவ்வுலகத்தில் இருந்து எடுத்துச் செல்ல முடியாது. நாம் செய்யும் பாவமும்,புண்ணியமுமே இறப்பிற்குப் பின் நம்முடன் வருபவை. ஆனால் நீங்களோ மூதாட்டியின் குடிசையை உங்களது மாளிகைக்காக இடித்துப் பாவத்தை சேர்த்துக் கொண்டாயே இது நியாயமா? என்றார்.

மன்னன் தனது தவறை உணர்ந்தான். அழகிய மாளிகையை அந்த மூதாட்டிக்கு வழங்கினான்.

நன்றி

மங்கை ஆன்மீகமலர்

பிரதமர் ரட்ணசிறி தனது தொகுதியில் தோல்வி

(தொழும்பு)

பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தனது தொகுதியில் தோல்வியைத் தழுவிக் கொண்டார்

விடுதலைப் புலிகளுக்கும் ஐ தே கட்சிக்குமிடையில் ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டதாக முழக்கமிட்டு வந்த பிரதமரின் கருத்துக்கள் அவரது தொகுதியில் கூட எடுபடவில்லை என்பதை தேர்தல் முடிவுகள் சுட்டிக்காட்டுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது (ந-5)

முன்னைய பதிவுகளை ரத்து செய்து பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க முடியும்

(தொழும்பு)

கடந்தவருடம் ஆகஸ்ட்டில் நடைபெற்ற க.பொ.த (உயர்தரம்) பரீட்சையின் பெறுபேறுகளின் படி பல்கலைக்கழக அனுமதி பெற்றவர்கள் தமது அனுமதியை ரத்துச்செய்து இவ் வருட பெறுபேறுகளின் அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதிக்கு மீள விண்ணப்பம் செய்யலாமென்று பல்கலைக்கழக மானியஆண்ணக்குழு அறிவித்துள்ளது

இத்தகைய புதிய பதிவுகளை மேற்கொள்ள விரும்பும் மாணவர்கள் இம் மாதம் 30 ம் திகதிக்கு முன்னர் சம்பந்தப்பட்ட பல்கலைக் கழகங்களுக்கு விண்ணப்பம் செய்ய வேண்டுமென பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுத்தலைவர் பீ.ஆர்.ஆர். என் மெண்டிஸ் அறிவித்துள்ளார் (ம)

எமது கோரிக்கையை நிறைவேற்றும் கட்சிக்கு ஆதரவு வழங்குவோம்

பி. பி. சிக்கு சங்கரி பேட்டி

(யாழ்ப்பாணம்)

ஒருசில சக்திகள் தமது வழமையான பாணியில் கள்ள வாக்குகளைப் போட்டு ஆசனங்களைக் கைப்பற்ற இயலாமையால் தமது அணியால் எதிர்பார்த்த வெற்றியைப் பெற முடியவில்லை எனயாழ். மாவட்டத்தில் போட்டியிட்ட தமிழ்க்கட்சிகளின்கூட்டமைப்பு முதன்மை வேட்பாளரும் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் துணைத் தலைவருமான வி. ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பி.பி.சி. தமிழ்ச் சேவைக்கு அவர் அளித்த போட்டியில் மேலும் கூறியதாவது;

7ஆண்டுகளின் பின்னர் அரசியலில் பெரு மாற்றம் ஏற்பட்டிருப்பதை அண்மைய தேர்தல் முடிவுகள் காட்டியுள்ளன.

ஐக்கிய தேசியக்கட்சிக்கு போதிய பலம் கிடைத்துள்ள இந்த நிலையில் எமக்கோ, அவர்களுக்கோ இணைந்து பணியாற்ற வேண்டிய கட்டாயம் கிடையாது.

தவிரவும், நாம் கண்மூடித்தனமாக எவரையும் ஆதரிக்க முடியாது.

நாம் பட்டம், பதவி கருதி தேர்தலில் போட்டியிட்டவர்களல்ல எமது கொள்கைகளை ஏற்று, எந்த அரசு விசுவாசமாக நாம் முன்வைத்துள்ள கோரிக்கைகளை நிறைவேற்ற முன்வருகின்றதோ எமக்கு விசுவாசமாக எந்தக்கட்சி உழைக்கிறதோ அதனுடன் மட்டுமே நாம் உடன்பட்டுப்போக இயலும் இது தொடர்பாக இன்னமும் நாம் தீர்மானிக்கவில்லை. அத்துடன், நாம்நான்குதமிழ்க் கட்சிகள் கூட்டாக ஒன்றிணைந்து தேர்தலில் போட்டியிட்டநிலையில், தனிப்பட்டு நான் ஒருவன் எந்த ஒருவரு முடிவையும் எடுக்கமுடியாது.

எதுவானாலும் எமது ஏனைய அமைப்பின் உறுப்பினர்களையும் கலந்தாலோசிக்கவேண்டிய நிலையுள்ளது.

யுத்த நிறுத்தம், புலிகள் மீதானதடைநீக்கம்உள்ளிட்ட எமது கோரிக்கைகளை நிறைவேற்ற புதிதாக அமையும் அரசுக்கு அழுத்தம் கொடுப்பதே எமது முதன்மைப்பணி என்று குறிப்பிட்டார். (உ)

நிலைமை வழமைக்கு

(யாழ்ப்பாணம்)

தேர்தல் முடிந்த கையுடன் கடந்த 5ஆம்திகதி 4 மணிக்கு அமுல்படுத்தப்பட்ட நாடு தழுவிய ஊரடங்குச்சட்டம் நேற்று காலை 6 மணிமுதல் நீக்கப்பட்டதைத் தொடர்ந்து நேற்றுமுதல் யாழ். மாவட்டத்தில் இயல்பு நிலை திரும்பியுள்ளது.

தனியார் கல்விநிறுவனங்கள் மற்றும் அலுவலகங்கள் வழமைபோல் இயங்கின.

அத்துடன் போக்குவரத்தும் வழமைபோல இடம்பெற்றது. (உ)

பெறுபேற்றுச் சான்றிதழை பெறுக

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரிய கலாசாலை 2000 ஆம் ஆண்டு மார்கழி மாதம் நடைபெற்ற இறுதிப்பரீட்சைக்கு தோற்றியவர்களை தமது பெறுபேற்றுச் சான்றிதழ்களை எதிர்வரும் 10 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு நேரில் வந்து தவறாது பெற்றுக்கொள்ளுமாறு அதிபர் அறிவித்துள்ளார். (உ)

பொதுமகன் படுகாயம்

(மந்திகை)

நெல்லியடி நகரப்பகுதியில் நேற்றுக் காலை 11.30மணியளவில், மோட்டார்சைக்கிள் இராணுவப்பிரிவினரின்மோட்டார் சைக்கிள் மோதியதில் பொதுமகன் ஒருவர் காயமடைந்துள்ளார்.

சம்பவத்தில்வதிரி ஆலங்கட்டையைச்சேர்ந்த சின்னத்துரை ரதிமணி (வயது 46) என்பவரேகாயமடைந்தவராவார். இவர் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ- 23)

போட்டி ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

ஹற்றன் நஷனல் வங்கியின் ஆதரவுடன் யாழ் மாவட்ட கூடைப் பந்தாட்டச் சங்கம், கழகங்கள் பாடசாலைகள் இடையே நடத்திய கூடைப் பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி இன்று நடைபெறுவதாக அறிவிக்கப் பட்டிருந்த போதும் தவிர்க்க முடியாத காரணத்தினால் அந்த நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளது ஏனைய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும். (உ- 2)

இராசிபலன்

8-12-2001
(கார்த்திகை 23, சனி)
அட்டமி பி.ப 1.40 வரை
பூரம் மு.ப. 11.00வரை
ராகுகாலம் 9.17- 10.47
நல்லநேரம் 3.17- 4.47
சித்தம்

மேடம்
காரிய இடையூறு, மனக்கவலை, விவாதம், குடும்பக் கவலை.

இடபம்
உடல் நலக்குறைவு, தன்னம்பிக்கைக் குறைவு, அபகீர்த்தி, முயற்சி தாமதம்.

மிதுனம்
தனவரவு, காரிய அனுகூலம், இனியசம்பவம், கூடுமுயற்சி.

கடகம்
அமைதிக் குறைவு, வாக்குவாதம், பொருள் விரயம், காரிய தாமதம்,

சிங்கம்
பெரியோர்மதிப்பு, முயற்சிகைகூடும், நண்பர்களுதவி, போசன சுகம்.

கன்னி
காரிய அலைச்சல், சுபசெலவு, சயனசுகக் குறைவு, உணர்ச்சிவசப்படல்,

துலாம்
தனலாபம், சென்ற இடத்தில் செல்வாக்கு, காரிய நன்மை, குடும்ப நன்மை,

விருச்சிகம்
தொழில் முன்னேற்றம், பிறர் உதவி, முயற்சிகை கூடும், அதிகாரம்,

தனுசு
மனப்பயம், கட்டுப்பாடு, உடல் உழைப்பு, காரிய தாமதம்,

மகரம்
உடல்வியாதி, துயரம், வீண் பிரச்சினை, முயற்சி தாமதம்.

கும்பம்
நண்பர்கள் சந்திப்பு, திடீர் பயணம், கௌரவம், போசன சுகம்.

மீனம்
உடல் நலமடைதல், தொழில் மேன்மை, காரிய அனுகூலம், பிரயாணம்,

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

பருத்தித்துறை பிரதேசசபை- புலோலி
பொதுச்சந்தைகளின் 2002ம் ஆண்டுக்கான
மீள் கேள்வி அறிவித்தல்

படிவ விநியோகம்:- 10- 12- 2001 ஆம் திகதி 12.00மணிவரை
படிவம் ஏற்றல்:- 11- 12- 2001 ஆம் திகதி 12.00மணிவரை
படிவம் திறத்தல்:- 11- 12- 2001 ஆம் திகதி 2.00மணிக்கு

அட்டவணை

குத்தகை விபரம்	படிவக் கட்டணம்	ப.சே.வரி	கேள்வி வைப்பு	ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை ஜி. எஸ். ரி உட்பட
1) மந்திகைச் சந்தை	150.00	37.50	1500.00	1,22,500.00
2) மாணாண்டிச் சந்தை	150.00	37.50	1500.00	1,00,800.00
3) பொற்பதிமீன்சந்தை	150.00	37.50	1500.00	76,200.00

எந்தவோரு கேள்வியையும் அல்லது அதன் பகுதியையும் காரணம் காட்டாது ஏற்கவோ, அல்லது நிராகரிக்கவோ தலைவருக்கு அதிகாரம் உண்டு. இது சம்பந்தமான மேலதிக விபரங்களையும் பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன், ஜே.பி.யு.எம்.
தலைவர்,
பருத்தித்துறை பிரதேசசபை.

தலைமை அலுவலகம்,
பருத்தித்துறை பிரதேசசபை,
புலோலி.
27.11.2001

(C- 2988)

சிந்தனைக்கு விருந்து

சிறந்த செய்தி எது?

நாய்மனி தன்காலை நக்கிக் கடித்ததெனல் வாய்மை அதுமான்பாம் செய்தியோ? - 'நாயை மனிதன் கடித்து மரணிக்க வைத்தான்' எனலே சிறந்த செய்தி யாம்.

பழையவன்

ஜனநாயக ஆட்சியை வலுப்படுத்தும்

தார்மீகக் கடமை ஜனாதிபதி கைகளில்

எஸ். பாலகிருஷ்ணன் பி. பி. சிக்கு பேட்டி

(தொடர்ச்சி)

இலங்கையின் இன முரண்பாட்டு யுத்தத்துக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதை நோக்கமாகக்கொண்ட ஐ.தே.க ஆட்சியமைக்கும் வாய்ப்பு ஏற்பட்ட போதிலும்,

யுத்தத்தில் நம்பிக்கைவைத்துள்ள ஜனாதிபதி உடன்படாவிட்டால் ஐ தே கவின் நோக்கத்தை நிறைவேற்ற முடியாது.

அரச யாப்பு சீர்திருத்த இயக்கத்தின் தேசிய ஒருங்கிணைப்பாளர் எஸ்.பாலகிருஷ்ணன் இனிவரப்போகும் அரசியல் நிலைமை தொடர்பாக பி.பி.சிக்கு பேட்டியளிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில்,

ஜனாதிபதிக்கும், ஆட்சியமைக்கும் அரசுக்கும் இடையே இதுவிடயத்தில் இழுபறி தொடருமானால்,

இவ்வாறான கட்டத்தில் ஆரம்பிக்கப்படும் முரண்பாட்டு ரீதியிலான பேச்சுவார்த்தையில் புலிகள் பங்கு பற்றுவார்கள்அல்லதுஅதனை ஏற்றுக்கொள்வார்கள் என்பதை எதிர்பார்க்கமுடியாது.

இலங்கை அரசியல் யாப்புப் படி ஜனாதிபதி முழுமையான அதிகாரம் கொண்டவர் அமைச்சர்கள் பிரதியமைச்சர்களைப் பதவிப் பிரமாணம் செய்யும் பொறுப்பு அவரைச் சார்ந்தது.

ஆனால், கடந்த பல வருடங்களாக ஜனாதிபதிக்கும், ஐ தே.கவுக்கும்இடையிலான முரண்பாட்டு ரீதியிலான போக்கைப் பார்க்கும் போது இனியும் முரண்பாடு தொடர வாய்ப்புக்கள் இருக்கின்றன.

1994 இல் ஐ.தே.க.வின் ஜனாதிபதியாக டி.பி. விஜயதுங்க இருந்த போது சந்திரிகா தலைமையிலான பொ. ஐ மு; பாராளுமன்றில் அதிக ஆசனங்களைக் கைப்பற்றியது

அந்த நேரத்தில் ஐ. தே. க. மக்கள் தீர்ப்புக்கு கட்டுப்பட்டு பொ. ஐ. மு. ஆட்சி அமைக்கத் தேவையான அனைத்து ஆதரவையும் வழங்கி, இணக்கப்பாட்டுடன் நடந்து யாப்பியல் ரீதியான முரண்பாட்டைத் தீர்த்து வைத்தது.

ஆகவே ஜனாதிபதி சந்திரிகா மக்கள் ஆணைக்கு மதிப்பளித்து பதவிக்கு வரும் ஐ. தே; க. அரசாங்கத்தின் தலைவராக இருக்கப்போகின்ற பிரதம அமைச்சரின் விருப்பின் அடிப்படையில் தன் அதிகாரத்தைப் பயன்படுத்துவதை வரையறுப்பது அவசியம்.

ரணில் அமைச்சர்களை நியமனம் செய்யும் பட்சத்தில், அதனை நிராகரிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு. அதனைப் பயன்படுத்தும் பட்சத்தில் அது ஒரு மாபெரும் அரசியல் நெருக்கடியை உருவாக்கும்;

எனினும் இப்படியான முரண்பாடுகளைச் சுமுகமாகத் தீர்த்துக் கொள்வதன் மூலம் ஜனநாயக ஆட்சியை வலுப்படுத்த முடியும்.

ஜனாதிபதி தொடர்ந்தும் தனது பதவியை தக்கவைக்க விரும்பினால், புதிய அரசுடன் இணக்கப்பாட்டிற்குச் செல்வதைத்தவிர வேறு வழியில்லை.

தேர்தல் நடைபெற்று ஒரு வருடகாலத்திற்கும் பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்குஇல்லை ஒருவருடத்தின்பின்னர் சாதிக்கப்படும்;

இருப்பினும் இடைநிறுத்தம் அதிகாரத்தைப் பயன்படுத்தி ஒரு வருட காலத்திற்கு தொடர்ச்சியாக இடைநிறுத்தி, இடைநிறுத்தி ஒரு வருடம் முடிவுற்ற பின்னர் பாராளுமன்றத்தைக் கலைத்துவிடவும்.

4வருடங்களுக்கு புதிய அரசை ஆட்சி செய்யவிடாது இடையூறு செய்யவும் ஜனாதிபதி தனது அதிகாரத்தைப் பயன்படுத்த இயலும். (உ)

814தபால் பொதிகள் வந்தன

(யாழ்ப்பாணம்)

நேற்று முன் தினம் காங்கேசன்துறை வந்தடைந்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் கப்பலில் குடாநாட்டிற்கான வெளியூர் தபால்கள் அடங்கலாக 814 பொதிகள் எடுத்துவரப்பட்டுள்ளன.

ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தபடியால் குடாநாட்டில் சேகரிக்கப்பட்ட தபால் பொதிகள் அக் கப்பலில் அனுப்பி வைக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வந்துசேர்ந்த தபால் பொதிகள் காங்கேசன் துறையில் இருந்து நேற்றைய தினம் யாழ் பிரதான தபாலகத்திற்கு எடுத்து வரப்பட்டது; (ந-10)

விபத்தில் காயம்

கடந்த செவ்வாயன்று இரவுவேளை, வலி தென் மேற்கு பிரதேசசபைமுன்பாக ஏற்பட்ட மோட்டார்சைக்கிள், சைக்கிள் விபத்தில் தர்மலிங்கம் நகுலன் (வயது 20) என்பவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(உ-125)

விளையாட்டு செய்தி

இங்கிலாந்து அணியை இந்திய அணி வென்றது

(புதுடில்லி)

இந்திய, இங்கிலாந்து அணிகளுக்கிடையே மொஹாலியில் நடை பெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி 10 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 238 ஓட்டங்களுக்கு சகலவிக்கட்டுக்களையும் இழந்தது நாசிர் உசைன்85 ஓட்டங்களை பெற்றார்.இந்திய அணிசார்பாக பந்து வீச்சில் கார்பஜன் சிங் ஐந்து விக்கெட்டுக்களையும் அனில் கும்ளே இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலிற்குத்துடுப்பெடுத்தாடிய இந்திய அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 468ஓட்டங்களைப் பெற்றது. திராவிட்100 ஓட்டங்களையும், சச்சின் 88ஓட்டங்களையும்,டிராவிட்86ஓட்டங்களையும்பெற்றனர்.

இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க 230 ஓட்டங்களைப் பெற வேண்டிய நிலையில் ஆடத்தொடங்கிய இங்கிலாந்து அணி, சகல விக்கெட்டுக்களையும் இழந்து 235ஓட்டங்களைப்பெற்றது. கும்ளே ஆறு விக்கெட்டுக்களை வீழ்த்தினார் வெற்றி பெற ஐந்து ஓட்டங்களைப் பெற வேண்டிய நிலையில் இந்திய அணி விக்கெட்இழப்பின்றி இரண்டு பந்து வீச்சில்வெற்றிஇலக்கை அடைந்தது. ஆட்டநாயகனாககும்ளே தெரிவு செய்யப்பட்டார்.

இரண்டாவது டெஸ்ட் போட்டி வரும் செவ்வாய்க்கிழமை அமதாபாத்தில் நடைபெற உள்ளது.

(உ-2)

மிருசுவிலில் திருச்சொரூப பவனி

(யாழ்ப்பாணம்)

மிருசுவில் புனித நிக்கொலார் ஆலய வருடாந்த உற்சவ ஆராதனைகள் 7ம்திகதி வெள்ளிக்கிழமை மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது

உற்சவ கூட்டுத் திருப்பலி நாளை 9ந்திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்குருமுதல்வர் அருட்திரு செல்வராஜா அடிகளார் தலைமையில் நடை பெறும் அதனைத் தொடர்ந்து புனித நிக்கொலரின் திருச் சொரூப பவனியும் இடம் பெறும்.

இதன் பொருட்டு கடந்த பலமாதகாலமாக வழிபாடுகளின்றி இருந்த மேற்படி ஆலயம் கடந்தஞாயிற்றுக்கிழமை புதிய பங்குத்தந்தை அருட்திரு அருள் நேசன் அடிகளார் தலைமையில் பங்கு மக்களால் சிரமதானம் மூலம் துப்பரவு செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது; (ந)

46 படுகொலைகளுடன் நடந்து முடிந்த தேர்தல்

(தொடர்ச்சி)

நடந்து முடிந்த பாராளுமன்ற பொதுத் தேர்தலில வேட்புமனுத்தாக்கல் செய்த தினத்தில் இருந்து 46 படுகொலைகள் உட்பட 2332 வன்முறைச் சம்பவங்கள்இடம் பெற்றுள்ளதாகவும் நாட்டில் ஏற்பட்ட மிகப் படுமோசமான நிலை இதுவேயென தேர்தல் ஆணையாளர் தயானந்ததிஸநாயக்கா சுட்டிக் காட்டியுள்ளார்; (வ)

தேர்தலின் போதும் இடம் பெறாதவகையில் 46தேர்தல் கால படுகொலைகளும், 2332தேர்தல் வன்முறைச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளதாகவும் நாட்டில் ஏற்பட்ட மிகப் படுமோசமான நிலை இதுவேயென தேர்தல் ஆணையாளர் தயானந்ததிஸநாயக்கா சுட்டிக் காட்டியுள்ளார்; (வ)

உலக கிண்ண உதை பந்தாட்டப் போட்டி தெரிவில் மாற்றம்

(லண்டன்)

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளில் சம்பியன் பட்டத்தை பெறும் அணி,அடுத்த உலககிண்ணப் போட்டிக்குநேரடியாக தகுதி காணும் அணியாக இனிமேல் தெரிவு செய்யப்பட மாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் சம்பியன்பட்டத்தைவென்ற அணி நேரடியாகவே இறுதிப் போட்டிக்கு தெரிவு செய்யப் பட்டுவந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-2)

செல்வி ஜெயலலிதா முதலமைச்சராவதற்குத் தயக்கம்

சட்டம் மீண்டும் நெருக்குமா?

(சென்னை)

செல்வி ஜெயலலிதா இப்போதைக்கு முதலமைச்சர் பதவியை ஏற்கமாட்டார் என்று ஏஜன்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

டான்சி நிலபேர வழக்கிலிருந்து ஜெயலலிதா விடுவிக்கப்பட்டதும், தேர்தலில் மீண்டும் போட்டியிடுவார் என்றும் அல்லது இரண்டு மாதத்திற்குள் மீண்டும் முதலமைச்சர் பதவியை ஏற்பார் என்றும் செய்திகள் அடிபட்டன.

இதற்கெல்லாம் ஜெயலலிதா மௌனம் சாதிக்கிறார்.

உச்ச நீதிமன்ற நீதிபதி தினகரனின் தீர்ப்பையடுத்துமேன்முறையீடு செய்ய சிலர் முயற்சித்து வருவதால் திரும்பவும் தனது பதவியை இழக்க நேரிடலாமென்று கருதுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, முதலமைச்சர் பன்னீர்ச் செல்வம், தான் பதவி விலகப்போவதாகஎந்த இடத்திலும் தெரிவிக்கவில்லை என்றும்,

செல்வி ஜெயலலிதா சட்டத்தை உறுதி செய்து கொண்டபின்பே பதவியை ஏற்கலாமென்றும் தெரிய வருகிறது.

ஜெயலலிதா தேர்தலில் போட்டியிடுவதாயிருந்தால் முதலமைச்சர் பன்னீர்ச் செல்வம் மூலமாக சட்டமன்ற உயர்வை ஏற்படுத்தியிருக்க மாட்டார்என்றும்மாநில ஆளுநர் ரங்கராஜனை இற்றை வரை சந்திக்காததும் இதற்கு காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது; (து)

வலம்புரி ஆதரவில்

அமரர் சின்னத்தம்பி செல்லத்துரை (செய்தியாளர்) அவர்களின் ஞாபகார்த்த

"சிறுவர்பாடல்" போட்டி

★ முதலாம் பரிசு 1500
★★ இரண்டாம் பரிசு 1000
★★★ மூன்றாம் பரிசு 500

மற்றும் ஆறுதல் பரிசுகள் 5

- நாட்டின் சமகால சூழலைக் கருப்பொருளாகக் கொண்டு பாடல்கள் புனையப்பட வேண்டும்;
- பாடல்கள் சிறுவர்களின் உடல் உள விருத்திக்கு உதவுவதாக அமைதல் வேண்டும்.
- பாடல்களில் வரும் சொற்கள் சிறுவர்களுக்கு ஏற்ப இலகுவான மொழிநடையில் அமைதல் வேண்டும்
- பாடல்கள் 24 வரிகள் கொண்டதாக அமைதல் வேண்டும்
- பாடல்கள் மொழி பெயர்ப்பாகவே, தழுவலாகவோ ஏற்கனவே பிரசுரமானதாகவோ இருத்தல் கூடாது
- நாட்டின் எப்பகுதியில் வாழ்பவரும் வயது, பால் வித்தியாசமின்றி போட்டியில் கலந்து கொள்ளலாம்
- தாளின்ஒரு பக்கத்திலேயே பாடல்கள் எழுதப்பட வேண்டும்
- மேற்படி விதிமுறைகளிற்கு அமையாத பாடல்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது
- வலம்புரி ஆசிரிய பீடத்தின் நடுவர்களின் தீர்ப்பே முடிவானது
- "ஞாபகார்த்த சிறுவர் பாடல் போட்டி" வலம்புரி இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு 31-12-2001 இற்கு முன்னதாக அனுப்பிவைக்கவும்
- பரிசளிப்பு தைப்பொங்கல் பண்டிகையின் போது வழங்கப்படும்

என்றும் ஒருவுதல் வேண்டும்
புகழொடு நன்றியவா
வினை:
குறள்

வலம்புரி

இனவாதிக்கு விழுந்த அடி

பொதுஜன ஐக்கிய முன்னணி பொதுத்தேர்தலில் தோல்வியைத் தழுவிக்கொண்டது. இத்தோல்வி எதிர்பார்க்கப்பட்டதாக இருந்தாலும், ஐக்கிய தேசியக் கட்சிக்கு மிகக் குறுகிய காலத்தில் தொந்தரவு கொடுக்கமுடியாத தோல்வியாக இருப்பதால் இதனைப் படு தோல்வி என்று கூறுவதே பொருத்தமுடையதாகும்.

ஆட்சிக்கு வரமுன்னர், தாம் தேர்தலில் வெற்றி பெற்றால் ஆறு மாதங்களில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு கான்போம் எனக் கூறிய ஜனாதிபதி சந்திரிகா, ஆறு வருடங்கள் சென்றும் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணவில்லை.

இனப் பிரச்சனைக்கு என்ன விலை கொடுத்தும் தீர்வு காணுவேன் என்று கூறிய சந்திரிகாவின் வாக்குறுதியை நம்பித் தங்கள் வாக்குகளை அளித்த மக்கள், அதனை ஆறு வருடம் கடந்தும் மறக்கவில்லையென்பதை வாக்குறுதியை மறந்துபோன ஜனாதிபதி நினைவிருத்துக்கொள்ளாததும்தோல்விக்கு அடிப்படைக்காரணமாகும். இதுதவிர, பொதுஜன ஐக்கிய முன்னணி அரசில் பிரதமராகப் பதவியேற்ற ரட்ணசிறி விக்கிரமநாயக்கா இனவாதத்தை மோசமாகக் கக்கிவிட்டார் - பிரதமர் ரட்ணசிறியின் இனவாதத்தை ஏற்றுக்கொள்ளாத சிங்கள மக்கள் அவருக்கு தலையடி கொடுத்து வீட்டுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

இலங்கையின் வரலாற்றில் ஓர் பிரதமர் படுதோல்விக்குக் காரணமாக இனவாதம் பேசி தனது கட்சியின் படுதோல்விக்குக் காரணமாக இருந்தார் என்ற பெருமை ரட்ணசிறிக்கே உரியது. இனவாதம் பேசி இந்நாட்டில் மக்களைக் கொலை செய்வோருக்கு, இதைவிடத் தண்டனை வேறொன்றுமில்லை.

ரட்ணசிறிக்கும் பொ. ஐ. முன்னணிக்கும் ஏற்பட்ட கதி, நாட்டிலுள்ள சகல கட்சிகளுக்கும் ஒரு படிப்பினையாக அமைய வேண்டும். இது ஐகிய தேசியக் கட்சிக்கும் பொருந்தும். விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கி அவர்களுடன் பேச்சு நடத்தியிருந்தால் இந்த நிலை சந்திரிகாவுக்கு ஏற்பட்டிருக்காது என்பதை ஐ. தே. கட்சித் தலைவர் ரணில் உணர்ந்துகொண்டால் அக்கதி அவருக்கும் ஏற்படாது.

திறனாய்வுக் களம்

சிறுகதை இப்படித்தான் இருக்கவேண்டும்

சுதந்திராஜனின் நூல் ஓர் எடுத்துக்காட்டு

நூல்:- சுதந்திரராசா கதைகள்
ஆக்கம்:- எஸ். சுதந்திரராசா
கொக்குவில்

எழுத்தாளர் சுதந்திரராஜா அவர்களின் சிறுகதைகளைப் படிக்கிற போது தரமான நவீன ஓவியங்களைப் பார்ப்பது போன்ற நினைவுதான் எனக்கு ஏற்பட்டது. இவை சுகமாகத் தோலை உரித்து சாப்பிட்டு விடுகிற வாழைப் பழங்களல்ல சற்றே சிரமப்பட்டு எடுத்துச் சாப்பிட்டு அதன் இனிய சுவையை அனுபவிக்க வேண்டிய வேரிற் பலாப் பழங்கள்.

வெறுமனே கதை சொல்வதற்காக இச் சிறு கதைகள் எழுதப்படவில்லை. ஆசிரியர் தான் நினைத்த நல்ல கருத்தொன்றைக் கதைகளினூடாக வாசகர்களிடம் சேர்ப்பித்து விடும் எண்ணத்தோடு எழுதப்பட்டவை.

ஏதோஒரு வகையில் பாதிக்கப்பட்டு வாழ்க்கையில் துன்பங்களைச் சுமந்து கொண்டிருக்கும் மக்களே இவருடைய சிறுகதைகளின் பாத்திரங்கள் இந்தக் கதாபாத்திரங்களின் மீது வாசகர்களுக்கு ஏற்படும் அனுதாப உணர்ச்சியே ஆசிரியரின் வெற்றி.

பட்டறிவுள்ளவர்

பன்முகப்பட்ட தளங்களில் நடக்கும் இவருடைய கதைகளைப் படிக்கும் போது எனக்குப் பெருவியப்பு ஏற்படுகிறது. சாதாரண கள்ளுக் கொட்டிலிலிருந்து ஆடம்பரக் கார்களை இறக்குமதி செய்யும் பெரிய தாபனங்கள் வரை பல்வேறு தளங்களிலும் இவருடைய பார்வை மிக நுணுக்கமாகச்சென்று நிகழ்வுகளைப் படம் பிடித்திருக்கிறது: இவ்விதம் பல துறைகளிலும் பட்டறிவு கொண்ட எழுத்தாளர்கள் மிகச் சிலரே இருத்தல் கூடும்.

இலங்கையின் வடபுறம் தென்புறம் மத்திய மலைநாடு ஆகிய எல்லா இடங்களிலுமே இவருடைய கதாபாத்திரங்கள் நடமாடுகிறார்கள். தமிழ் முஸ்லிம் சிங்கள எல்லா இனங்களிலும் அந்தப் பாத்திரங்கள் இருக்கிறார்கள். அந்த இடங்களின் சூழல் காட்சியும் அந்தமனிதர்களின் இயல்புகளும் அவர்களின் பேச்சு மொழிகளும் கதைகளுக்கு உயிரூட்டி நிற்கின்றன. கதை நிகழ்வுகளும் பாத்திரங்களும் வெறும் கற்பனையாக இல்லாமல் நிஜங்களாகி விடுகின்றன. இது சுதந்திரராஜாவுக்கு மட்டுமே உரிய தனிச் சிறப்பு.

பேச்சு மொழி

'இலக்கியங்களில் இழிசனர் பேச்சு வழக்கு வருதல்தகாது' என்று வாதாடிய காலம் மலையேறிவிட்டது.

சுதந்திரராஜாவின் கதா பாத்திரங்கள் அனைவருமே தத்தமது இயல்புக்கேற்ற பேச்சு வழக்கில் பேசியிருப்பது பாராட்டப்படக்கூடியதாக இருக்கிறது.

ஆயினும்
'ஏக்கட்ட... உம்பட்ட... களபொளவென்ன ஒன நானே'

இப்படி ஒரு பாத்திரம் பேசும் போது வாசகர் முன் ஒரு கறுப்புத் திரை விழுந்து விடுகிறது.

வரதர்

இந்த இருளை பல கதைகளில் பல இடங்களிலும் சந்திக்க நேரிடுகிறது.

பிறமொழி மாந்தர் தத்தமது மொழியில் பேசுபவை அப்படியே தமிழ் எழுத்துக்களாக எழுதி விடுவது பற்றி சற்றே ஆய்வு செய்வது நல்லதென்றே தோன்றுகிறது.

அந்த மொழி தெரிந்த வாசகருக்கு அது மிகவும் பயன் செய்த போதிலும் அந்த மொழி தெரியாத பெரும் பான்மையினரின் நிலை பற்றியும் யோசிக்க வேண்டும்.

சிறுகதைக்கு எடுத்துக்காட்டு

சுதந்திரராஜாவின் சிறுகதைகள் எல்லாமே சின்னஞ் சிறு குட்டிக் கதைகள். தான் சொல்ல நினைக்கும் கருத்துக்கு ஏற்ற ஒரு காட்சியை மட்டும் எடுத்துக் கொண்டு எழுதுவதால்இப்படி அமைந்து விடுகிறதென நினைக்கிறேன். ஒரு நல்ல சிறுகதை இப்படித்தான் இருக்க வேண்டும். ஒரு நல்ல கவிதை போல சொற்செட்டுடன் இறுக்கமாக இருக்க வேண்டும். இவருடைய சிறுகதைகள் அந்த வகையில் சிறுகதை எழுதுவோருக்கு முன்னுதாரணமாக விளங்குகின்றன.

இந்தச் சிறுகதைகளை இன்னொரு முறை ஆறுதலாக அமைதியாக திரும்பப் படித்துச் சுவைக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறேன்.

தேர்தல் வன்முறையை நிறுத்த ஐ.தே.க-பொ.ஐ.மு உதவவேண்டும்

தேர்தல் ஆணையாளர் வேண்டுகோள்

(கொழும்பு)

இலங்கையில் தொடர்ந்து கொண்டிருக்கும் தேர்தல் வன்முறைகளை நிறுத்துவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியும் பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்று தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தேர்தல் முடிந்தவுடன் தயானந்த திஸாநாயக்க அறிக்கையொன்று வெளியிட்டுள்ளார். அவ்வறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்:

தேர்தல் வன்முறைகள் தொடர்பாக பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன இதனால் பல நெருக்கடிகளை எதிர் நோக்க வேண்டியுள்ளது. இந்நிலையில் தொடரும் வன்முறைகளை நிறுத்த இரு பிரதான கட்சிகளும் ஒத்துழைப்புவழங்க வேண்டும்

வேட்பு மனுதாக்கல்செய்த நாள் முதல் தேர்தல் நடைபெற்ற நாள் வரையில் 46 பேர் வன்முறைகளில் கொல்லப்பட்டுள்ளனர். அதிகமானோர்காயமடைந்துள்ளனர்; சொத்துக்கள் சேதமடைந்துள்ளது.

இதனை முடிவுக்கு கொண்டுவர கட்சிகள் பாடுபட வேண்டுமென்றும் தேர்தலில் கடமையாற்றிய ஊழியர்களுக்கும் நன்றி தெரிவிப்பதாகவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றி வைக்க வேண்டும்

ரணிலுக்கு இந்துமத குருபீடாதிபதி ஆசி

இலங்கை வாழ் மக்கள் புதியமாற்றம் ஒன்றை வேண்டியே தங்களின் தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சிக்கு அதிகப்படியான வாக்குகளை அளித்து புதிய அரசாங்கத்தை அமைக்கும் பாரிய பொறுப்பினை உங்கள் கைகளில் வழங்கி உள்ளார்கள் மக்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்படவேண்டும் என்பதே மதகுருவான எமது ஆசியும் பிரார்த்தனையுமாகும்;

இவ்வாறு சர்வதேச இந்து மத குருபீடாதிபதி கலாநிதி ஸ்ரீஜயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் ரணில்விக்கிரமசிங்காவுக்கு அனுப்பி வைத்த அருளாசிச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர்விடுத்தசெய்தியில் தற்போது ஏற்பட்டிருக்கின்ற மாற்றமானது வெறும் கதிரை மாற்றமாக இருக்கக் கூடாது கருத்துக்களில் மாற்றம் வேண்டுமென மக்கள் எதிர்பார்த்தனர்.

ஆட்சியில் கட்சிகளின் நிறம் மாறுவதை மட்டும் மக்கள் விரும்பவில்லை.

ஆட்சித்தலைவரின் நிலையிலும் குணமாற்றம் வேண்டும் என்றும் மக்கள் விரும்புகின்றனர். மக்களின் விருப்பம் நிறைவேறி உங்கள் கைகளில் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது; ஆனால் மக்களின் எதிர்பார்புகள் நிறைவேற்றப்படுமா? பூரணமாக நிறைவேற்றப்பட வேண்டும் என்பதே எமதுபிரார்த்தனையாகும்;

நிதானம், தூரநோக்கு, புரிந்துணர்வு, விட்டுக்கொடுக்கும் பண்பு, எல்லோரையும் அணைத்துச் செல்லும்இயல்பு என்பனவற்றை நீங்களும் உங்களின் கீழ்உள்ள பொறுப்புடைய புதிய வர்களும் கொண்டிருக்க இறை அருள் பூரணமாகக் கிடைக்க வேண்டுமென பிராத்தித்து அனைத்துக் குருமார்கள் சார்பிலும் எமது பூரண அருளாசிகளை வழங்குவதில் மனநிறைவு கொள்கிறேன் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது; (ந)

தினசரி தியானம்

முக்கனி

தானந் தவத்தருமஞ்சந்தமுஞ் செய்வர்சிவ
ஞானன் தனையணைய நல்லோர் பராபரமே

தாயுமானவர்

யோகம், பக்தி, ஞானம் என்னும் முக்கனியை இறைவா, உனக்குப் படைத்து வணங்க நான் கற்றுக் கொள்வேனாக.

வாழை, மா, பலா ஆகிய மூன்றை முக்கனி என்றோம். இவைகளுள் ஒவ்வொன்றும் தன்னளவில் சுவையும் சத்தும் உடையது; பின்பு மூன்றுஞ்சேருங்கால் சுவையிலும்உணவுச்சத்திலும் அவை பன்மடங்கு மேலோங்குகின்றன. கடவுளுக்குப் படைக்க அவைமுற்றிலும் பொருத்தமானவைகள். மனம், மொழி, மெய்யாகிய முக்கரணங்களை நாம் கடவுளுக்குக் கொடுத்து விட வேண்டும்.

ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்.

ஓ. எல். பரீட்சை ஒத்திவைப்பு

கல்விப் பொது சாதாரண பரீட்சை எதிர்வரும் 11ம்திகதி நடைபெறமாட்டாதென பரீட்சை ஆணையாளர் அமரக்கோன் அறிவித்துள்ளார்.

பரீட்சை ஆரம்பிக்கப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந- 4)

ஒரே பார்வையில் கட்சிகளின் முடிவுகள்

(கொழும்பு)

நடந்து முடிந்த பொதுத்தேர்தலில் அறிவிக்கப் பட்ட இறுதிமுடிவுகளின்படி கட்சிகள் பெற்றமொத்த வாக்குகளும் பெற்ற ஆசனங்களும் வருமாறு

கட்சி	மொத்த வாக்கு	ஆசனங் கள்	தேசிய பட்டியல்	மொத்தம்
ஐ.தே கட்சி	4086026	96	13	109
பொ.ஐ.மு.	3330815	66	11	77
ஜே.வி.பி.	815353	13	03	16
த.வி.கூ.	348146	14	01	15
மு.காங்.	—	04	01	05
ஈ.பி.டி.பி.	—	02	-	02
புளொட்	—	01	—	01
				225

யாழ். மாவட்டத்தின் 9 எம்.பிக்களின் விபரம்

யாழ். மாவட்டத்தின் தேர்தல் முடிவுகள் நேற்று உத்தியோக பூர்வமாக தேர்தல்ஆணையாளரால் அறிவிக்கப்பட்டது இதன்படி உதய சூரியன் சின்னத்தில் போட்டியிட்ட தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பு ஆறு ஆசனங்களையும், ஈ.பி.டி.பி இரண்டு ஆசனங்களையும், ஐக்கிய தேசியக் கட்சி ஒரு ஆசனத்தையும் பெற்றுக் கொண்டது.

ஒன்பது ஆசனங்களைக் கொண்ட யாழ் மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர் விபரம் வருமாறு:

★ சி. தவராஜா (ஈ.பி.டி.பி)

★ தி. மகேஸ்வரன் (ஐ. தே. க)

(ந)

★ வீ. ஆனந்தசங்கரி (த. வி. கூ)

★ மாவை. சேனாதிராஜா (த. வி. கூ)

★ கஜேந்திரகுமார் பொன்னம்பலம் (அ. இ. த. கா)

★ என். ரவிராஜ் (த. வி. கூ)

★ அ. விநாயகமூர்த்தி (அ இ. த. கா)

★ என். கே. சிவாஜிலிங்கம் (ரெலோ)

★ கே. என். டக்ளஸ் தேவானந்தா (ஈ. பி. டி. பி)

அனுருத்தவை கைதுசெய்க பொலிஸ்மா அதிபரிடம் ஐ. தே. கட்சி கோரிக்கை

(கொழும்பு)

பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தையை உடனடியாகக் கைது செய்யுமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளர் கருணாசேன கொடித்துவக்கு பொலிஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்கிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கண்டி மல்வானைப் பகுதியில் அண்மையில் 10 முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் அனுருத்தவே பினணியில் நின்று செயற்பட்டார் என்று குற்றம் சாட்டிய கருணாசேன அவரைக் கைது செய்யவேண்டுமென்று பொலிஸ்மா அதிபரிடம் கோரியுள்ளார்.

நேற்று நண்பகல் கருணாசேன கொடித்துவக்கு பொலிஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்கை சந்தித்துப் பேசியுள்ளார்.

இச்சந்திப்பின்போதே மேற்கண்டவாறு கோரிக்கைவிடுக்கப்பட்டது.

அனுருத்தவை கைது செய்யுமாறு பொலிஸ்மா அதிபருக்கு யாரும் கொடுக்கப்பட்ட போதும் இதுவரை கைது செய்ய எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்பட வில்லையென கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை கண்டிச் சம்பவத்தின் சூத்திரதாரியென கருதப்படும் அனுருத்தவின் மகன் லொகான் ரத்வத்த நேற்று இலங்கையிலிருந்து வெளிநாடொன்றுக்கு தப்பிச் சென்றுள்ளாரென்று தகவல்கள் வெளியாகியுள்ளது.

[ந]

மகேஸ்வரன் மீண்டும் வெற்றி

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட முன்னாள் யாழ். மாவட்ட எம்.பி தி. மகேஸ்வரன் மீண்டும் வெற்றி பெற்றுள்ளார்.

கடந்த தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி யாழ். மாவட்டத்தில் பெற்ற வாக்குகளிலும் பார்க்க இம்முறை கூடியளவு வாக்கை தி. மகேஸ்வரன் பெற்று ஐக்கிய தேசியக் கட்சியின் எம்.பி பதவி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

(ம)

கொழும்பு வருமாறு ரணில் சித்தார்த்தனுக்கு அழைப்பு

(வவுனியா)

பொதுத் தேர்தலில் வன்னி மாவட்டத்தில் வெற்றி பெற்ற புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தனுக்கு ஐக்கிய தேசியக் கட்சி தலைவர்ரணில் விக்கிரமசிங்கா வாழ்த்துச் செய்தி ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

வவுனியாவில் தங்கியுள்ள சித்தார்த்தனுக்கு இவ் வாழ்த்துச் செய்தியை தொலைபேசி மூலம் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

அவ் வாழ்த்துச் செய்தியில் பாராளுமன்றத்தில் மீண்டும் உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன் விரைவில் கொழும்புக்கு வருமாறும் அதற்குரிய விமானப் பயண ஒழுங்கு செய்து தருவதாகவும் ரணில் தெரிவித்துள்ளார்.

(வ)

யாழ். குடாநாட்டில் திடீர் ஊரடங்கு அறிவிப்பு மக்கள்பாடு அல்லோலம்!

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில்நேற்று மாலை 3 மணிமுதல்ஊரடங்குச் சட்டம் அமுலுக்கு வருவதாக திடீரென அறிவிக்கப் பட்டதால் மக்கள் பெரிதும் அல்லோல கல்லோலப் பட்டனர்.

வர்த்தக நிலையங்கள் அவசர அவசரமாக இழுத்து மூடப்பட்டது தனியார் அரச ஊழியர்கள் அலுவலகங்களை காலி செய்து விட்டு அவசர அவசரமாக வெளியேறினர். தூர இடங்களுக்குச் செல்வோர் பிரயாணத்துக்கு நேரம் போதாமையால் பெரும் அவஸ்தைப்பட்டோர் பலர் அருகில் உள்ள உறவினர் நண்பர்கள்மற்றும்தெரிந்தவர்களின் வீடுகளில் கூட தங்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது.

நாடுதழுவிய ரீதியில் தேர்தல் வன்முறைகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில் ஊரடங்குச் சட்டம் அமுலுக்கு கொண்டு வரப்பட்ட போதும் யாழ்குடாநாட்டைப்பொறுத்தவரையில் இதுவரை தேர்தல் முடிவுகளுக்கு பின்னர் பாரிய வன்முறைச் சம்பவங்கள் எதுவும் இடம் பெறவில்லைஅதுடன்முனைத்துக்கு முளம் படையினரின் காவலரண்களும் உள்ளன இதற்கு மேலாக தொடர்ந்து ஒவ்வொரு இரவும் ஊர்அடங்கியே உள்ளது. இந்நிலையில் யாழ் குடாநாட்டில் தற்போது அமுலுக்குவரும் மேலதிகமான ஊரடங்கு உத்தரவு மக்களை மேலும் பாதிப்பதாக பொதுமக்கள் முணுமுணுப்பதை உணர முடிகிறது.

(இ)

ஐக்கிய

புலிகளுடன் பேசுவதற்கு இவ்வெளிநாட்டு உதவி தேவைப்படாது. ஏனெனில் கடந்த காலங்களில் ஐக்கிய தேசியக் கட்சி விடுதலைப்புலிகளுடன் நேரடியாகவே பேசியது

ஆனால் விடுதலைப்புலிகள் யேச்சுவார்த்தையின் போது வெளிநாட்டு மத்தியஸ்தம் ஒன்றைக் கோருவதற்குரிய சாத்தியக் கூறுகள் அதிகமாக உள்ளது.

ஏனெனில் காலங்காலமாக ஆட்சி செய்த அரசியல் தலைமைகள் விடுதலைப்புலிகளை தமிழ்மக்களை பல சுற்றுப் பேச்சுவார்த்தையின் போது ஏமாற்றியிருக்கின்றது

ஆகையால் விடுதலைப்புலிகளின் வேண்டுகோளுக்கு இணங்க ஒரு வெளிநாட்டு மத்தியஸ்தம் தேவையென்று கோரப்படும் பட்சத்தில் மாத்திரம் ஐக்கிய தேசியக்கட்சி அதற்கு இணங்கும்இல்லையே அவர்களுடன் நேரடியாகவே பேசி இனப்பிரச்சினையைத் தீர்க்க தயாராகவுள்ளது.

ஐக்கியதேசியக்கட்சி அரசு தமிழ் மக்களின் அபிலாசைகள் அனைத்தையும் தீர்க்க வேண்டும். அதில் எவ்வித மான இருவேறுபட்ட கருத்துக்கு இடமில்லை; அதற்குரிய அனைத்து நடவடிக்கைகளையும் நான் எடுப்பேன்.

வன்னி மீது விதிக்கப்பட்டுள்ள உணவுமருந்து மற்றும் அனைத்துத் தடைகளும் நீக்கப்படும். வன்னி யாழ்ப்பாணக் குடாநாட்டுக்காக தரைவழிப்பாதைதிறக்கப்படும்எரிபொருள்போக்குவரத்து மின்சாரம்தொலைபேசிசதிகள் ஏற்படுத்தப் படுத்துவதுடன்அனைத்துப்பொருளாதாரத் தடைகளும் நீக்கப்படும்.

இலங்கை உட்பட வெளிநாடுகளில் மற்றும் அகதி முகாம்களில் வாழுகின்ற மக்கள் அனைவரும் தமது சொந்த இடங்களுக்குச் சென்று நிம்மதியாக வாழ்வதற்குரிய ஏற்ற சூழ் நிலையைபுதியதாகஆட்சியை பொறுப்பேற்றுள்ள ஐக்கிய தேசியக்கட்சி நிறைவேற்றும்

எமது தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவி ஏற்றதும், மந்திரிசபை கூட்டப்பட்டு பாராளுமன்றம் கூட்டப்பட்ட முதல் ஒருவார காலத்திற்குள், வடக்கு கிழக்கு பிரதேசத்தில், குறிப்பாக யாழ் குடாநாடு மற்றும் வன்னிப்பிரதேசத்தில் சட்டவிரோத ஆயுதங்களுடன் நடமாடுவோரின் ஆயுதங்கள் அனைத்தும் களையப்பட்டு அனைவரும் நிராயுதபாணிகளாக்கப்படுவர்.

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் யுத்தநிறுத்தமொன்றை ஏற்படுத்தி பேச்சுவார்த்தையை நடத்தி சமாதானத்தை ஏற்படுத்துவோம் இதன் மூலம் பொருளாதாரத்தை மேம்பாடடையச் செய்ய வெளிநாட்டு முதலீடுகளும் வரவேற்கப் படுமென்று மகேஸ்வரன் மேலும் தெரிவித்துள்ளார்

(இ)

விடுதலைப்புலிகளின்பகுதி வேட்பாளருக்கும் வெற்றி!

(மட்டக்களப்பு)

விடுதலைப் புலிகளின் சப்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வசிக்கும் ஒருவர் நடந்து முடிந்த 12வது பொதுத்தேர்தலில் மட்டக்களப்பில் போட்டியிட்டு வெற்றியீட்டி பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யபபட்டுள்ளார்.

மட்டக்களப்பு பணகாமத்தைச்சேர்ந்தவரும் அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் உறுப்பினருமான ஞானமுத்து கிருஸ்ணபிள்ளை (வெள்ளிமலை) என்பவரே தமிழர் கூட்டமைப்பு சார்பாக போட்டியிட்டு வெற்றியீட்டியுள்ளார்.

விருப்பு வாக்கு அடிப்படையில் இவர் இரண்டாவது இடத்தில் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பராராஜசிங்கம் விருப்புவாக்கின் அடிப்படையில் மூன்றாவதாகவந்து எம். பிபதவியை தட்டிக்கொண்டதும் பொன் செல்வராசா வெற்றிவாய்ப்பைஇழந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

[ந-4]

மரண அறிவித்தல்

மாணிக்கம் அன்னம்

9/1, பழம் வீதி கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் அன்னம் அவர்கள் 7-12-2001ல் காலமாகி விட்டார். அன்னார் மாணிக்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சின்னத்தபபி, லட்சுமி தம்பதிகளின் அன்புமகளும், இந்திரா, இராசமணி ஜெயந்தி, சுகந்தி, சாந்தா, கமலா, மாலா, கிளி, தவச்செல்வம் ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற துரை, சின்னையா (பத்மா ரயர் வேக்ஸ் உரிமையாளர்) பஞ்சநாதன் ஆகியோரதும் மற்றும் இராசு ஜே.பி., காந்தி, காராளசிங்கம் (யப்பான்) ரவிரயர் வேர்க்ஸ் ஆகியோரின் அருமைச் சகோதரியும், மார்க்கண்டு, கமலநாதன், ஜேயக்கொடி, துரை புவனேஸ்வரன் (பட்டு) நியூட்டன (மோகன்) சுகந்தா ஆகியோரின் மாமியாருமாவார் அன்னாரின் பூதவுடல் ஈமக்கிரியைக்காக அன்னாரின் இல்லத்திலிருந்து 8-12-2001 சனிக்கிழமை முற்பகல் 10-00 மணிக்கு கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

தகவல்

மா. தவச்செல்வம் (மகன்)

9il, பழம் வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(4068)

இப்பத்திரிகை "வலம்புரி" அன் கோ ஸ்தாபனத்தாரால் இல; 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 8ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.